செய்தி வெளியீடு எண்: 186 நாள்: 28.02.2019

## செய்தி வெளியீடு

தமிழ்மொழியின் மேன்மைக்கு, ‘சொற்குவைத் திட்டம்’ என்பது ‘பொருட்குவை’யைப் போல பயனளிக்கும் உயர்நோக்கத் திட்டமாகும் என்று தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறைஅரசு செயலாளர் திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள் பெருமிதமுடன் தெரிவித்தார்.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில், ‘சொற்குவைத் திட்டம்’ – அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் சென்னை மாநிலக் கல்லூரியின் திருவள்ளுவர் அரங்கில் இன்று (28.02.2019) காலை நடைபெற்றது.

கருத்தரங்கைக் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்துத் தலைமையுரையாற்றிய தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு. இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்மொழியிலுள்ளஎல்லாச் சொற்களையும் ஒன்று திரட்டி ஓரிடத்தில் அனைவருடைய பயன்பாட்டுக்கும் வழங்கும் உயர்ந்த நோக்கத்துடன் தமிழ்நாடுஅரசு ‘சொற்குவைத் திட்டத்தைச்’ செயற்படுத்த உள்ளது என்று தெரிவித்தார்.

ஒருகோடி ரூபாய் தொடர் செலவினத்தில் செயற்படுத்தப்படவுள்ள இந்தச் ‘சொற்குவைத் திட்டம்’ தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் ‘பொருட் குவையைப்’ போலப் பயனளிக்கும் என்றும், இத்திட்டத்தின் மூலம் தமிழில் எத்தனைச் சொற்கள் உள்ளன என்பதை யார் வேண்டுமானும் அறியமுடியும் என்றும் கூறினார். தமிழ்மொழியின் சொல் எண்ணிக்கையை 10 இலட்சமாக உயர்த்துவதற்குச் ‘சொற்குவைத் திட்டம்’ உதவும் என்றும், இத்திட்டத்தின் பயனை இன்னும் ஒரு சில ஆண்டுகளில் மக்கள் உணர முடியும் என்றும் தெரிவித்தார்.

கருத்தரங்கில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் திரு. தங்க. காமராசு அவர்கள் நோக்கவுரையாற்ற, மாநிலக் கல்லூரிமுதல்வர் முனைவர் இரா. இராவணன் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்.

முனைவர் தெ.ஞானசுந்தரம், மருத்துவர் சுதாசேசையன், முனைவர் இ. சுந்தரமூர்த்தி, முனைவர் மதன்கார்க்கி ஆகிய அறிஞர்கள் பங்கேற்று, ‘சொற்குவைத் திட்டத்தைச்’ செம்மையாக நிறைவேற்றும் வகையிலும் ‘சொல்லாக்கம்’ பற்றியும் மின் அகராதியின் தேவை குறித்தும் தங்களின் கருத்துகளைத் தெரிவித்தார்கள்.

பல்லைக்கழகத் துணைவேந்தர்கள், மொழியியல்வல்லுநர்கள், அகராதி அறிஞர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்ற, இக்கருத்தரங்கில் வைக்கப்பட்டிருந்த ‘சொல் உண்டியலில்’ மாணவர்கள் தாங்கள்உருவாக்கிய புதிய தமிழ்க் கலைச்சொற்களை ஆர்வமுடன் வழங்கினார்கள்.

சிறந்த கலைச் சொற்களைவழங்கிய மூன்று மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**